தி இந்து

6 CHENNAI
செவ்வாய், ஜனவரி 13, 2015

# இந்தியா- நியூசிலாந்து இடையே வர்த்தக வாய்ப்புகள்

## இரு நாட்டு குழுவினர் பேச்சு

■ சென்னை

இந்தியா-நியூசிலாந்து இடையேயான வர்த்தக வாய்ப்புகள் குறித்து சென்னையில் இரு நாட்டு குழுவினரும் நேற்று கலந்துரையாடினர்.

இந்தியா-நியூசிலாந்து நண்பர்கள் சங்கம், லயோலா "லிபா" மேலாண்மைக் கல்லூரி சார்பில் இந்தியா-நியூசிலாந்து இடையேயான வர்த்தக வாய்ப்புகள் குறித்த மாநாடு சென்னையில் நேற்று நடந்தது. மாநாட்டுக்கு இடையே இரு நாடுகளின் தொழிலதிபர்கள், தூதரக அதிகாரிகள், வர்த்தக மேம்பாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் கலந்துரையாடினர்.

அப்போது இந்தியாவுக்கான நியூசிலாந்து ஹை கமிஷனர் கிரஹாம் மோர்டான் கூறும்போது, "பொறியியல் நிர்வாகவியல் திறன்களை மேம்படுத்துவதில் இந்தியாவும், நியூசிலாந்தும் இணைந்து சிறப்பாக செயல்பட முடியும். நியூசிலாந்தில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள் மேற்படிப்பு படிக்கிறார்கள். வெளிநாட்டு மாணவர்களுக்கு பல்வேறு கல்வி உதவித்தொகைகளை வழங்குகிறோம். கல்வி, சுற்றுலா விசா வெளிநாட்டினருக்கு உடனடியாக வழங்கப்படுகிறது" என்றார்.

இந்தியா-நியூசிலாந்து நண்பர்கள் சங்க நிறுவனர் வென்சஸ்லாஸ் அந்தோணி பேசுகையில், "இந்தியா-ஆஸ்திரேலியா இடையே கல்வி, விளையாட்டு வர்த்தகம், கலாச்சாரம், தொழில்நுட்ப ரீதியாக நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் இந்த அமைப்பானது கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது" என்று குறிப்பிட்டார்.

நியூசிலாந்து வேர்ஹவுஸ் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி மார்க் பாவெல் கூறும்போது, "ஜவுளி, ஆயத்த ஆடை உற்பத்தி துறையில் அதிக வர்த்தக வாய்ப்புகள் உள்ளன. நேர்மை, தரம், குறித்த நேரத்தில் வேலையை முடித்துக்கொடுப்பது ஆகியவை இந்தியர்களின் சிறப்பு பண்புகள் என்று பாராட்டினார்.

"லிபா" தலைவர் அருட்திரு என்.கஸ்மீர்ராஜ் பேசும்போது, "வரலாற்றுச் சிறப்புக்கும், புராதன சின்னங்களுக்கும் பெயர்பெற்ற இந்தியாவில் சுற்றுலா துறையில் நிறைய வாய்ப்புகள் உள்ளன. அதேபோல், நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வெளிநாடுகளுடன் ஒப்பிடும்போது குறைவான சம்பளத்தில் வேலைக்கு கிடைக்கிறார்கள். அதேபோல் மருத்துவத் துறையிலும் வாய்ப்புகள் அதிகம். காரணம், அமெரிக்காவுடன் ஒப்பிட்டால் இந்தியாவில் மருத்துவக் கட்டணம் மூன்றில் ஒரு பங்குதான். எனவே, குறைந்த கட்டணத்தில் உயர்தர மருத்துவ சிகிச்சையை பெற முடியும். விமானம் மற்றும் விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுடன் கூட்டுசேர்ந்து செயல்பட முடியும்" என்றார்.

நியூசிலாந்து கலாமாஷூ குழுமங்களின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஸ்டீவ் டிசூசா கூறுகையில், "கர்நாடகாவில் தமிழ்நாட்டின் ஓசூர் அருகே அதிநவீன தொழில்நுட்பத்துடன் என்வெலப் கவர்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை விரைவில் அமைக்க இருக்கிறோம். இதன்மூலம் 400 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்" என்று குறிப்பிட்டார்.